விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 30 சனிக்கிழமை (16.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 301

## கிண்ணம் வென்றது சென்னை

ஐ.பி.எல் தொடரில் 4ஆவது முறையாக அசத்தல்



15

வடக்கு மாகாணத்தின்

## நிர்வாகக் கட்டமைப்பு மறுசீரமைக்கப்படும்

ஆளுநர் ஜீவன் உறுதி



(கொழும்பு)

வடக்கு மாகாண நிர்வாகக் கட்டமைப்பு மறுசீரமைப்பு செய்யப்படும் என்றும் அதனைச்

15

பாலின் விலையை

## 120 ரூபாயாக அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

அகில இலங்கை பால் விவசாயிகள் சம்மேளனம் ஒரு லீற்றர் பாலுக்கு குறைந்தபட்சம் 120 ரூபாய்

15

முதலமைச்சர் வேட்பாளராக

# மாகாணத் தேர்தலில் போட்டியிடத் தயார்!

### நீதியரசர் விக்னேஸ்வரன் அறிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகள் இணைந்து மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுமாறு கோரிக்கை முன்வைத்தால் நிச்சயமாக போட்டியிடுவேன் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மடத்தடியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரியின் மடத்தடிப் பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்

15

## மோசடி வழக்கு; பசில் விடுதலை

(கொழும்பு)

திவிநெகும நிதி மோசடி வழக்கில் இருந்து அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் திவிநெகும பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

15

IOC நிறுவனத்தின்

## எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும் செயற்

15

கொரோனாவால்

## 20 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் 20 பேர் உயிரிழந்துள்ள

15

மாகாணங்களுக்கு இடையிலான

# பயணக் கட்டுப்பாடுகளை இறுக்கமாக கண்காணியுங்கள்

### பாதுகாப்புப் பிரிவினருக்கு ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

எதிர்வரும் 21ஆம் திகதி வரை மாகாணங்களுக்கு இடையிலான எல்லைகளில் கடுமையான சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பாதுகாப்புப் பிரிவினருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இணைய வழியாக இடம்பெற்ற கோவிட் ஒழிப்புக்கான தேசிய செயலணி கூட்டத்தில் இந்தத் தீர்மானம்

15

கிணற்றிலிருந்து

## வயோதிபர் சடலமாக மீட்பு

புலோலியில் சம்பவம்

(கரணவாய்)

வீட்டு வளவிற்கு பின்புறமாகவுள்ள கிணற்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளது.

15

முல்லையிலிருந்து பருத்தித்துறை வரை

## இழுவைப் படகுக்கு எதிராக கடல்வழியாக இன்று பேரணி

(கரணவாய்)

இழுவைப் படகு தடைச்சட்டத்தினை முறையாக அமுல்படுத்துமாறு கோரி எதிர்ப்புப் பேரணி ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இழுவைப்படகு தடைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்தக் கோரி நாளை ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியான எதிர்ப்

15

## புதிய சுகாதார வழிகாட்டல்கள் வெளியாகின

- திரையரங்குகள் திறக்க அனுமதி.
- 20 பேருடன் மரணச்சடங்கு நடத்தலாம்.
- திருமண மண்டபங்களில் 50 பேர் அனுமதி.
- பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், முன்பள்ளிகளை ஆரம்பிக்க முடியும்.

கொரோனாப் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் சில தளர்வுகளுடன் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நடைமுறையிலிருக்கும் வகையில் புதிய சுகாதார நடைமுறைகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்த்தனவினால்

15

# மோ. சைக்கிள், பட்டா வவுனியாவில் விபத்து இளைஞன் காயம்

வவுனியா, ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சியில் இருந்து ஏ9 வீதி ஊடாக வவுனியா நகரை நோக்கி பயணித்த மகேந்திரா பட்டா ரக வாகனம் வவுனியா விவசாய பண்ணை முன்பாக பயணித்துக் கொண்டிருந்தபோது கார் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டது.

இதன்போது வவுனியா நகரில் இருந்து ஏ9 வீதி ஊடாக ஓமந்தை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ஞா-250)

# நெடுங்கேணி வைத்தியசாலையில் உயிரிழந்த 24 வயது யுவதிக்கு கொரோனா

(முல்லைத்தீவு)

நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலையில் உயிரிழந்த 24 வயது யுவதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூட பரிசோதனையில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு ஊடாக பெறப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட குறித்த உயிரிழந்த பெண்ணின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(ஞா-18)

# பாராளுமன்ற உறுப்பினர் கத்தியால் குத்திக் கொலை

## பிரித்தானியாவில் பயங்கரம்

பிரித்தானியாவில் கொன்சவேட்டிவ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

69 வயதுடைய சேர் டேவிட் அமேஸ் (Sir David Amess) என்ற பாராளுமன்ற உறுப்பினரே உயிரிழந்தவராவார்.

நேற்று வெள்ளிக்கிழமை பகல் எசெக்ஸ் தென்மேற்குப் பகுதியிலுள்ள தேவாலயமொன்றின் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

கத்திக்குத்து சம்பவத்தில் படுகாயத்திற்கு உள்ளாகிய அவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## சேதனப்பசளை பாவனையில்

# விளைச்சல் கிடைக்காவிட்டால் அரசு நட்டஈடு வழங்கும்

## அமைச்சர் மகிந்தானந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பெரும்போகத்திற்கு தேவையான இரசாயன உரத்தை தற்போது இறக்குமதி செய்யமுடியாது. அதற்கான காலமுமில்லை. இறக்குமதி செய்வதாயின் இரண்டு மாத காலம் காத்திருக்க வேண்டும். ஆகவே விவசாயிகள் ஒரு சிலரது அரசியல் நோக்கத்திற்கு உள்ளாகாமல் விவசாய நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். சேதன பசளைப் பாவனையில் எதிர்பார்க்கும் விளைச்சல் கிடைக்காவிட்டால் அதற்கு அரசாங்கம் நட்டஈடு வழங்கும் என விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பெரும்போக விவசாய நடவடிக்கை ஆரம்பமானது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் குறிப்பிட்டதாவது, பெரும்போக விவசாயத்திற்கு தேவையான உரத்தை கோரி விவசாயிகள் வீதிக்கிறங்கி போராடினார்கள். தற்போது சேதன பசளை உரம் தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டும், இறக்குமதி செய்யப்பட்டும் நாடு தழுவிய ரீதியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

உரம் கோரிய விவசாயிகள் தற்போது சேதன பசளை வேண்டாம். இரசாயன உரம் வேண்டும் என போராடுகிறார்கள். இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கு காலம் போதாது. இறக்குமதி செய்வதாக இருந்தால் 2மாத காலம் காத்திருக்க வேண்டும். போலியான இரசாயன உரத்தை கோரி விவசாயிகளை போராட்டத்தில் இறக்கி அதனூடாக அரசியல் இலாபம் தேடிக்கொள்ள ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். உரிய நேரத்திற்கு உரம் வழங்குவோம் என்று விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதியை பாதுகாத்துள்ளோம். தற்போது வழங்கப்பட்டுள்ள உரத்தினால் விளைச்சல் குறைவடைந்தால் அரசாங்கம் அதற்கு நட்டஈடு வழங்கும் என்றார். (ஞா)

## 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

# வசந்த கரன்னாகொடவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

கொழும்பில் 5 மாணவர்கள் உட்பட11 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் பிரதிவாதியான முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பத்திரத்தை மீளப் பெறுவதற்கு சட்டமா அதிபரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை வலுவற்றதாக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று அழைக்கப்பட்டது.

குறித்த வழக்கு சோபித ராஜகருணா மற்றும் தம்மிக கனேபொல ஆகிய மேன்முறையீட்டு நீதியரசர்கள் அடங்கிய ஆயம் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

இந்த மனுவின் பிரதிவாதிகளான சட்டமா அதிபர் மற்றும் அட்மிரல் வசந்த கரன்னாகொட ஆகியோரை எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் இதன்போது அறிவித்தல் விடுத்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள் நால்வரால் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)


## உடனடியான வேலை வாய்ப்பு

பிரபல வங்கி ஒன்றின் உப நிறுவனமானதும் துரிதமாக வளர்ந்து வரும் ஆயுள் காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து நிற்கும் இளைஞர், யுவதிகள் (18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும்)
- ஓய்வு பெற்றவர்கள்.
- பகுதி நேரம் வேலை செய்ய ஆர்வம் உள்ளவர்கள்.
- இல்லத்தரசிகள்.

### தேவைப்படும் பதவி வெற்றிடங்கள்

- தனிப்பட்ட நிதியியல் ஆலோசகர்.
- சிரேஷ்ட தனிப்பட்ட நிதியியல் ஆலோசகர்.
- கள முகாமையாளர்.
- சிரேஷ்ட கள முகாமையாளர்.




விண்ணப்ப முடிவுத் திகதி 29/10/2021

தொடர்புகளுக்கு

077 312 6637/ 021 492 0323

(8243)



## அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 08.09.1980

மறைவு 02.09.2021

கடந்த 02.09.2021 ( வியாழக்கிழமை ) அன்று இறைபதம் அடைந்த நாவற்காடு அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அல்வாய், மனோகரா, தனத்தியவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர்.

### அமரர் தியாகராசா மதனபாதம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (14.10.2021) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.10.2021) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனத்தியவத்தை,
மனோகரா, அல்வாய்.

(8251)

குடும்பத்தினர்

# ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை நிறுத்தப்பட்டால் மாற்று வழி எம்மிடம் உண்டு

## இலங்கை மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை இடைநிறுத்தப்பட்டாலும், கொள்கைரீதியிலான மாற்றங்களைச் செய்வதன் மூலம் அந்த இழப்பைக் கையாள முடியும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் வட்டிவீதங்களில் சீரான அதிகரிப்பொன்று அவதானிக்கப்படும் அதேவேளை, தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் அதன் நிதிப்பாய்ச்சல்களை உரியவாறு கையாளக்கூடிய நிலையிலிருக்கின்றது.

மேலும் இவ்வருடம் எமது நாட்டின் நாணயமாற்றுவீதம் 6.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போது அதனை உகந்த மட்டத்தில் பேணுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதுமாத்திரமன்றி ஏனைய நாடுகள் சிலவற்றுடனான கொடுக்கல், வாங்கல்களும் இடம்பெற்றுவரும் நிலையில், அதன் மூலம் நாணயமாற்றுவீதம் சீரான மட்டத்தை எட்டும் என்று எதிர்பார்ப்பதுடன் அதன்மூலம் கடன்களை மீளச்செலுத்துகையும் பொருட்களின் விலைகளும் சாதகமான மாற்றங்களைக் காண்பிக்கும்.



தற்போதைய சூழ்நிலையில் எமக்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஏனெனில் எதிர்வரும் காலங்களில் மீளச் செலுத்தவேண்டிய நிதியைச் செலுத்துவதற்கான இயலுமையை நாம் கொண்டிருக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (4-5)

# தீர்வு கிடைக்காவிட்டால் கொழும்பை முற்றுகையிட்டு போராட்டம்

## விவசாயிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் விவசாயிகளின் உரப் பிரச்சினைக்கு அரசாங்கம் சரி யான தீர்வை வழங்காவிட்டால், நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு பாரிய போராட்டம் நடத்தப்படும் என அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின்னேரியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவசாயிகளின் போராட்டத்தில் பொலநறுவை மாவட்ட விவசாய அமைப்புகளின் தலைவர்கள் இந்த கருத்தை வெளியிட்டனர்.

தரமான உரத்தை சரியான நேரத்தில் பெற வேண்டும் என்பதே எமது ஒரே வேண்டுகோள். வேறு எதையும் நாங்கள் எதிர்பார்க்க வில்லை.

உர விவகாரத்தில் அரசாங்கம் விவசாயியை தொடர்ந்து ஏமாற்றி வந்தது. எனவே, விவசாய அமைச்சர் சொல்வதில் விவசாயிகளுக்கு நம்பிக்கை இல்லை.

அரசு இப்போது உரம் மற்றும் பிற மண்ணைக் கலந்து விளை பொருட்களை விவசாயிகளுக்குக் கொடுக்க முயற்சிக்கிறது. ஆனால் அவை உரம் அல்ல.

இதனால் விவசாயிக்கு ஏற்படும் இழப்பை அரசு ஏற்க வேண்டும். அரசு இழப்பை சரியாக மதிப்பிட்டு நியாயமான இழப்பீடு வழங்க வேண்டும். அதற்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (4-5)

# முதலாம் தரத்தில் இணையவுள்ள மாணவர்களுக்கான நேர்காணல் நடத்தப்படும் காலக்கெடுவில் மாற்றம்

## கல்வி அமைச்சு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு முதலாம் தரத்துக்கு மாணவர்களை உள்ளீர்ப்பது குறித்து முடிவு எடுப்பதற்காக நடத்தப்படும் பிள்ளைகளைச் சேர்ப்பிக்கும் நேர்காணல்களை நடத்துவதற்கான காலக்கெடுவை கல்வி அமைச்சு திருத்தியுள்ளது.

அதன்படி நவம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் நேர்காணல் நடத்தப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் தற்காலிக பட்டியலை நவம்பர் 30 ஆம் திகதிக்கு அறிவிப்பு பலகையில் காட் சிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் மேல்முறையீடுகளை ஏற்றுக் கொள்வதற்கான திகதி டிசெம்பர் 14 ஆகும். அந்த திகதியில் இருந்து 28 ஆம் திகதி வரையான இரண்டு வாரங்களுக்குள் மேன்முறையீடு தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இறுதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் இறுதிப் பட்டியல் ஜனவரி 14 ஆம் திகதி யன்று வெளியிடப்பட வேண்டும்.

இந்த திருத்தங்கள் மாகாண வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக் கும் அனுப்பப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. கொரோனா தொற்று நோய் காரணமாக பாடசாலைகளை மூட வேண்டியிருந்ததால் இந்த காலக்கெடு திருத்தப்பட்டுள்ளது எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

முந்தைய சுற்றறிக்கையின்படி இந்த ஆண்டுக்குள் அனைத்து தேர்வு செயல்முறையும் முடிக்க திட்டமிடப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5)

# வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கொவிட் தொற்றாளர்களுக்கான 24 மணி நேர தொலைபேசி சேவை

## நல்லூர் பிரதேச சபையால் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கொவிட் தொற்றாளர்களுக்கான அழைப்பு மையம் நாளை மறுதினம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 24 மணி நேர சேவையாக பரீட்சாத்தமாக நல்லூர் பிரதேச சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் 021 222 2701 எனும் நேரடி தொலைபேசி (HOT LINE) இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். மேலும் 076 270 0808 எனும் வட்ஸ் அப் இலக்கம் மற்றும் npscallcenter@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாகவும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் அறிவித்துள்ளார். (4-5)



அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றையதினம் கெஸ்பேவ நகரில் எதிர்க்கட்சியினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்

## திருமதி. தனேந்திரன் நீலாதேவி



வேலணையைப் பிறப்பிடமாகவும் கொட்டடி சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தனேந்திரன் நீலாதேவி 14.10.2021 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை கண்மணியின் மகளும் நாகலிங்கம் அன்னலட்சுமியின் பாசமிகு மருமகளும் தனேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் கமலாதேவி, விஜயலட்சுமி, புஸ்பராணி, காலஞ் சென்ற செல்வராணி மற்றும் உதயராணி ஆகியோரின் சகோதரியும் காலஞ் சென்ற குணரட்னம் மற்றும் பத்மநாதன், இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் லாவன்யா, துரிதா (கனடா) ஆகி யோரின் பாசமிகு தாயாரும் ரமேஸ் (கனடா) பிரபாகரன் ஆகியோரின் மாமியாரும் கௌசி, ஹிசாந், அதிஷ்ரா (ஏஞ்சல் பாடசாலை), டினுஜன், ஹரிஸ், ஜஸ்வின், மித்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப் படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: நா.தனேந்திரன்(கணவர்)**

யாழ்.மாவட்ட தேசோதயத்தின் தலைவர், யாழ்.மாநகர சபை உறுப்பினர், யாழ்.பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்தி சமாசத் தலைவர், பூமணியம்மா அறக்கட்டளையின் யாழ்.மாவட்ட தலைவர், யாழ்ப்பாண நுழைவாயில் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர், கொக்குவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், ஐக்கிய மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அமைப்பின் யாழ்.மாவட்ட தலைவர் (URI) யாழ்ப்பாணம் J/83 பிரிவின் பொலிஸ் சிவில் கொமிற்றி தலைவர், யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசார பேரவை உறுப்பினர், வில்லூன்றி இந்து மயான பரிபாலசபைத் தலைவர்.

(8257)

# மரண அறிவித்தல்



மலர்வு
15 – 07 – 1953

உதிர்வு
14 – 10 – 2021

# செல்வி நடனவதி முருகேசு (தேவி)

**( சங்கீத ஆசிரியையும் ஓய்வுநிலை பிரதி அதிபரும்**
**கிளி / தருமபுரம் மத்திய கல்லூரி )**

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் தருமபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நடனவதி முருகேசு (தேவி) நேற்று முன்தினம் (14.10.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - அரசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் சிவஞான சுந்தரமூர்த்தி (சிவா G.S), சிவஞானவதி (விசுவமடு), காலஞ்சென்ற நித்தியானந்தமூர்த்தி, திருஞானமூர்த்தி (பாலா), கணேசமூர்த்தி (கனடா), தனஞ்சயன் (சுவிஸ்), அகிலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தருமபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(8260)

தருமபுரம்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்

# இராசிபலன்

**16.10.2021**
புரட்டாதி 30, சனிக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 8.03 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 12.28 மணிவரை
சுபநேரம் -3.02-4.32 மணிவரை
இராகு காலம் -9.02-10.32 மணிவரை
சந்திராஷ்டமம்- புனர்பூசம், பூசம்
ஏகாதசி விரதம்

வளவன்


மேஷம்
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.


ரிஷபம்
வழிபாட்டால் சிறப்பினைக் காணும் நாள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.


மிதுனம்
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.


கடகம்
நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.


சிம்மம்
குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், நண்பர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கன்னி
முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.


துலாம்
கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், வளர்ச்சி கூடும் நாள், பிறர் உதவியுண்டு.


விருச்சிகம்
சந்தித்த நபர்களால் சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.


தனுசு
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வியாபார விரோதம் விலகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


மகரம்
பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்
சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.


மீனம்
ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

பகையும் பொறாமையும் வட்டியும், முதலுமாய் திரும்பி வரும்.

# மற்றுமொரு முடக்கநிலை ஏற்படும் அபாயம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**சுகாதார கட்டுப்பாடுகளின் கீழ் நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் அதனை கண்டு கொள்ளவில்லை என்றால் ஆபத்தான நிலைமை ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

மக்கள் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டால் ஆபத்தான மற்றுமொரு கொவிட் அலை உருவாகக் கூடும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் நவிந்த டி செய்ஸா தெரிவித்துள்ளார்.

நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான ஒரு படியாக கொவிட் சுகாதார வழிகாட்டுதல்கள் தளர்த்தப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும், சரியான கட்டுப்பாடு இல்லாமல் செய்தால் எதிர் வரும் நாட்களில் ஏற்படும் விளைவுகள் மோசமாக இருக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு சில சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், சுகாதார வழிகாட்டுதல்களில் இருந்து விலகி சாதாரணமாக செயற்பட்டால் நாடு மீண்டும் முடக்க நிலைக்கு செல்வதனை தடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-5)

# வெளிநாட்டு நாணயங்கள் மூலம் வாகன இறக்குமதி

## மத்திய வங்கி யோசனை

(கொழும்பு)

இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில், அரசாங்கத்திற்கு யோசனை ஒன்று முன்வைப்பதற்கு எதிர்பார்ப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவிலாளர் சந்திப்பில் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இதனை குறிப்பிட்டுள்ளார். வாகனங்களை இறக்குமதி செய்யும் போது வெளிநாட்டு நாணயத்தை மாத்திரமே பயன்படுத்தி இறக்குமதி செய்யும் புதிய முறையை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நாணயத்தில் செலுத்த ஒரு முறையை உருவாக்க முடிந்தால், அந்நிய செலாவணி அதன் வழியாக நாட்டிற்கு கொண்டு வர முடியும்.

இது தொடர்பில் அரசாங்கத்திற்கு எழுத்துபூர்வமாக அறிவிப்போம் என நம்புகின்றோம் என ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார். (4-5)

# சிகை அலங்கரிப்பு கட்டணங்களும் அதிகரிப்பு

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது. இதனை தாங்கிக் கொள்வதற்காக சிகை அலங்கரிப்பு நிலையத்தில் அறவிடப்படும் கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

கொழும்பு உள்ளிட்ட ஏனைய நகரங்களிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களிலும் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (4-5)


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்- 01.04.1938
மறைவு- 06.09.2021

யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியின்
ஆசிரியர் சி. ரகுபதி
அவர்களின்
அன்புத் தந்தையார்
அமரர்.
**கணபதிப்பிள்ளை**
**சிவராமலிங்கம்**
அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி



(சி-2824)


ஆசிரியர் சகோதரத்துவம், யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

# விவசாயிகளுக்கு தேவையான உரத்தைப் பெற்றுத் தருமாறு

# கிளிநொச்சி மாவட்டத்தில் கவனயீர்ப்புப் போராட்டம்

(கண்டாவளை)

**விவசாயச் செய்கைக்கு தேவையான உரத்தை பெற்றுத் தருமாறு கோரி நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**






கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை முன்பாக இருந்து மாவட்ட செயலகம் வரை சென்ற பேரணி மாவட்ட செயலகத்தில் நிறைவடைந்து.

மேலும் ஜனாதிபதி, விவசாய அமைச்சர், மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கான மகஜரும் கையளிக்கப்பட்டது.

மேற்படி மகஜர்களை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் பெற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த போராட்டத்தின் போது சேதனப் பசளை உரிய தரத்தில் கிடைப்பதில்லை எனவும் மாவட்டத்தில் தேவையான 40 வீதமான நிலம் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் விவசாயிகளுக்கு தேவையான உரத்தை பெற்று தருமாறும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(7-5-315-316)



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் 90 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் இந்திய துணை தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(படம்:-சிவசாந்தன், ரவிசாந்

# ஈழத் தமிழரை நெகிழவைத்த இசையமைப்பாளர் டி.இமான்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இசைக்கலைஞர் ஒருவரை தென்னிந்திய திரைப்பட பின்னணி இசையமைப்பாளரான டி.இமான் கௌரவபடுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் பஞ்சமூர்த்தி குமரனுக்கே இந்த கௌரவம் கிடைத்துள்ளது.

பிரபல இசையமைப்பாளர் டி.இமானின் இசை அமைப்பில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியாகவுள்ள "அண்ணாத்த" திரைப்படத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடலொன்றுக்கு யாழ். இசைக் கலைஞரான குமரன் இசை வழங்கியுள்ளார்.

குறித்த பாடலுக்கு நாதஸ்வர இசை வழங்குவதற்காக குமரனை டி.இமான் அழைத்து பெருமைப்படுத்தியுள்ளமை இலங்கை தமிழர்களை நெகிழ்ச்சியடைய வைத்துள்ளது. (7-5)



# எமது மீனவர்களின் உணர்வுபூர்வமான பிரச்சினைகளை நிதானத்தோடு கையாள வேண்டும்

## தமிழ்த் தேசியக் கட்சி தலைவர் ஸ்ரீகாந்தா

(யாழ்ப்பாணம்)

வடபிரதேசத்தை அண்டிய இலங்கைக் கடற்பரப்பிற்குள் தொடர்ந்து ஊடுருவும் தமிழ் நாட்டு ஆழ்கடல் இழு விசைப் படகுகளால் எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றது எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத் தரணியுமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அனுப்பிய ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

போர் ஓய்ந்து விட்ட நிலையில், மிகவும் பாரிய அளவில் தொடர்ந்து நிகழ்ந்து வந்திருக்கும் தமிழ் நாட்டு மீனவர்களின் எல்லை தாண்டிய அத்துமீறல்களால் படுமோசமாக எமது மீனவர்கள் பாதிக்கப்பட்டு வந்திருக்கையில், இதைத்தடுத்து நிறுத்த வேண்டிய இலங்கை அரசாங்கம் தனது கடற்படை ஊடாக தேவையான நடவடிக்கைகளை போதுமான அளவில் எடுக்க வேண்டுமென்றே தவறியிருக்கின்றது.

இந்த சூழ்நிலையால், வட பகுதி மீனவர்களின் ஜீவாதாரம் அழித்தொழிக்கப்படும் பேராபத்து நெருங்கி வருவதன் காரணமாகவே அவர்கள் கொந்தளிக்க தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில் எமது மீனவர்களின் உணர்வுபூர்வமான பிரச்சினை பொறுப்போடும் நிதானத்தோடும் கையாளப்பட வேண்டும்.


தமிழ்நாட்டு மீனவர்களையும் எமது மீனவர்களையும் மோத வைக்க விரிக்கப்பட்டிருக்கும் சதிவலைக்குள் நம்மவர்கள் சிக்கிக்கொள்ளக் கூடாது. இலங்கைக் கடற்பரப்பிற்குள் ஊடுருவும் இந்தியப் படகுகளை மடக்கிப்பிடிப்பதையும், அவற்றில் இருப்பவர்களை கைது செய்து, சட்டத்திற்கு அமைவாக நீதிமன்றில் நிறுத்துவதையும் தனது கடற்படை ஊடாக செய்ய வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை வலியுறுத்தி, தமிழ்த்தேசிய அரசியல் தரப்பிலிருந்து சாத்தியமான சகல வழிகளிலும் அழுத்தம் கொடுக்கப்படுவதே இன்றைய அவசரத் தேவையாகும் என மேலும் தெரிவித்தார். (7-5)

# சண்டிலிப்பாயில் விபத்து பெண்ணொருவர் படுகாயம்

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண் டிலிப்பாய் பகுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற விபத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், சண்டிலிப்பாய் தொட்டிலடிப் பகுதியில் லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்து ஏற்பட்டது. இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (7-5-104)



விஜயதசமி தினமான நேற்று நல்லை ஆதீனத்தில் ஏடு தொடக்கல் நிகழ்வு இடம்பெற்றது. இதில் 50க்கும் மேற்பட்ட பிள்ளைகள் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள் மூலம் வித்தியாரம்பம் செய்யப்பெற்றனர். (படம்:ரவிசாந்)

## அறிவித்தல்
### எழுதுநர் பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பம் கோரல்

01. பெயர் - புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் 7ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு
02. பதவி - எழுதுநர் (நிரந்தரம்)
03. சம்பள குறியீட்டு இலக்கம் - 302/15
04. சம்பள அளவுத் திட்டம் - 15545-130X10-140X10-18245.00
05. மேலதிக படிகள் - இத்துடன் சுற்றுநிருபத்திற்கமைவான படிகள் அனைத்தும் வழங்கப்படும்

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) க.பொ.த.(சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றில் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவம்.

(இ) 1. சங்க எல்லைப் பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. விண்ணப்பிக்கும் பதவி கடித உறையில் மேற்பக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.
3. கல்வித் தகைமைச் சான்றிதழ் நிழற் பிரதி இணைத்தல் வேண்டும்.

மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 2021.10.21ம் திகதி தொடக்கம் 2021.11.06ம் திகதி நண்பகல் 12.30 மணிக்கு முன்னர் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தயாரித்து "தலைவர் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் விண்ணப்பத்தினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்**
**பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**
**புதுக்குடியிருப்பு.**

(C-2823)


# சைபர் போருக்கு தகுதி வாய்ந்த நாடாக இலங்கை மாற வேண்டும்

## சுப்ரமணியன் சுவாமி தெரிவிப்பு


(கொழும்பு)

**தேசிய பாதுகாப்பு தொடர்பான நவீன சவால்களை எதிர்கொள்வதற்கு "சைபர் போருக்குத் தகுதிவாய்ந்த நாடாக" இலங்கை தன்னை மாற்றியமைக்க வேண்டும் என பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களின் ஒருவரும் மாநிலங்கள் அவை உறுப்பினருமான சுப்ரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.**

நாடொன்றின் தேசிய பாதுகாப்பு 4 விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். நோக்கம் என்ன?, எதற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது?, கையாளும் உத்தி அல்லது நுட்பமுறை என்ன?, வளங்களை விநியோகிக்கும் கட்டமைப்புக்கள் எவை? ஆகியவையே அந்நான்கு காரணிகளாகும்.

19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் உலகளாவிய ரீதியில் பலதரப்பட்ட போர்கள் பதிவாகியிருக்கின்றன. அவற்றுடன் 21 ஆம் நூற்றாண்டில் சைபர் யுத்தமும் (சைபர் வோர்) இணைந்திருக்கிறது. அதன் காரணமாக இப்போது தேசிய பாதுகாப்பைப் பொறுத்தமட்டில் சிறிய நாடு, பெரிய நாடு என்ற பாகுபாடு இல்லாமல் போயுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியா போன்ற பெரிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை சிறியதோர் தீவாக இருக்கலாம்.



ஆனால் இலங்கையானது சைபர் யுத்தத்திற்கு அவசியமான தொழில்நுட்பங்களை விருத்தி செய்வதுடன் அதற்குரிய நிபுணர்களை உருவாக்கினால் மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குச் சமனான பலம்வாய்ந்த நாடாக மாற முடியும் என அவர் தெரிவித்தார். (4-5)


## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மணமகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**மணமகளிமார் தேவை**

| | |
|---|---|
| வயது 36 அத்தம்<br>லண்டன் சிற்றிசன்<br>கிரகபாவம் 50 | வயது 33 சித்திரை<br>03 கிரகபாவம் 24<br>கனடா சிற்றிசன் வேலை<br>Graphic Designer |
| வயது 33 விசாகம்<br>கிரகபாவம் 27<br>M.B.B.S. Doctor (இலங்கை) | வயது 36 ரோகினி<br>பாவம் 60 செவ்வாய் 27<br>கனடா சிற்றிசன்<br>வேலை QA Arcolost (ஆய்வாளர்)<br>Diploma in Engineering |
| வயது 28 பரணி கிரகபாவம் 37<br>கனடா சிற்றிசன்<br>Truck Driver | |
| வயது 31 அவிட்டம்<br>சூரியசெவ் 10 இல் பாவம் 27<br>கனடா சிற்றிசன் | வயது 28 விசாகம்<br>செவ்வாய் 07 இல் பாவம் 44<br>கனடா சிற்றிசன்<br>உயரம் 5' Machine Operator |
| வயது 33 விசாகம்<br>BSC Quantity Surveyor<br>வேலை Side Engineer<br>கிரகபாவம் 16 லண்டன் சிற்றிசன் | வயது 37 விசாகம் பாவம் 21 1/2<br>செவ்வாய் 12 இல்<br>கனடா சிற்றிசன் |

தொடர்புகளுக்கு
+1437 244 6737, 0763490083

(8255)


# கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் நேரடியாக போராட்டத்தில் குதிப்பேன்

## முருத்தெட்டுவே தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் கொடுத்துள்ள வாக்குறுதிகளை மீறினால், 38 ஆயிரம் ஊழியர்கள் அங்கம் வகிக்கும் எமது தாதியர் சங்கத்தையும் இணைத்துக்கொண்டு ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை வெற்றிகொள்ள அரசாங்கத்தை எதிர்த்து களத்தில் இறங்குவேன் என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதிபர், ஆசிரியர் போராட்டம் தற்போது 90 நாட்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் பாதிக்கப்பட்டுள்ளது மாணவர்களேயாகும்.

நான் தலையிட்ட காரணத்தினால் தான் ஜனாதிபதியும் பிரதமரும் இந்த பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக எனக்கு வாக்குறுதி வழங்கியுள்ள காரணத்தினாலும் அதிபர், ஆசிரியர் சங்கங்கள் எனது வாக்குறுதிகளை நம்பி மாணவர்களுக்காக ஆசிரியர் சங்க போராட்டங்களை கைவிடுங்கள்.

இப்போது அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை ஏமாற்றி அரசாங்கம் சூழ்ச்சி செய்யுமானால் நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தாதியர் சங்கத்தில் 38 ஆயிரம் ஊழியர்கள் உள்ளனர்.

அவர்களையும் இணைத்துக்கொண்டு ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைக்காக அரசாங்கத்தை எதிர்த்து போராடுவேன் என அவர் தெரிவித்தார். (4-5)






# திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியாவிற்கு வழங்கப்படவில்லை

## விஜித ஹேரத்

(கொழும்பு)

திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் ஒருபோதும் இந்தியாவிற்கு சொந்தமாக்கப்படவில்லை. உடன்படிக்கை மூலமாக இவற்றை இந்தியாவிற்கு கொடுத்து விட்டதாக கூறுவது முழுப்பொய்யாகும் எனவும், சகல எண்ணெய்க் குதங்களும் இலங்கைக்கே சொந்தமாக உள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் 2003 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி உடன்படிக்கை ஒன்றை இந்தியாவுடன் செய்து கொண்டது.

இந்த உடன்படிக்கை 20 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் என்ற அடிப்படையில் செய்துகொள்ளப்பட்டது. அதேபோல் இந்த உடன்படிக்கையை செய்தவேளையில் வரி உடன்படிக்கை ஒன்றினையும் செய்ய வேண்டும் என முதலாம் உடன்படிக்கையில் கூறப்பட்டிருந்தது. அதாவது முதலாவதாக செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை நடைமுறைப்படுத்தும் ஆறுமாத காலத்திற்குள் வரி உடன்படிக்கை ஒன்றினை செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டாய சரத்தொன்று உள்ளது.

ஆனால் அவ்வாறான வரி உடன்படிக்கை எதுவும் செய்து கொள்ளவில்லை. ஏனென்றால், நாம் தலையிட்டு அப்போதைய ஆட்சியை மாற்றினோம். 2003 ஆம் ஆண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும் 2004 ஆம் ஆண்டில் நாம் தலையிட்டு ஆட்சியை மாற்றிய காரணத்தினால் இந்த வரி ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

ஆகவே, திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியாவிற்கு சொந்தம் என்பது முழுப்பொய்யாகும். சகல எண்ணெய்க் குதங்களும் இலங்கைக்கே சொந்தமாகும் என அவர் தெரிவித்தார். (4-5)


பாரதம் / வெளிநாடு

# விண்வெளி சுற்றுலாவை நிறுத்திவிட்டு பூமியை முதலில் காப்பாற்றுங்கள்

## இங்கிலாந்து இளவரசர் வில்லியம்

(லண்டன்)

அமெரிக்கவைச் சேர்ந்த பெரும் பணக்காரர்களான ஜெப் பேசாஸ், எலான் மஸ்க், ரிச்சர்டு பிரான்சன் உள்ளிட்டோர் விண்வெளிக்கு சுற்றுலா செல்லும் திட்டத்தை செயற்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகின்றனர். மேலும் விண்வெளி சுற்றுலாவை வர்த்தக ரீதியில் கொண்டு வருவதற்காக கடும் போட்டி நிலவி வருவதாகவும் கூறப்படுகிறது.



இந்த நிலையில் இங்கிலாந்து இளவரசர் வில்லியம், விண்வெளி சுற்றுலா குறித்து கூறியுள்ள கருத்து கவனத்தை ஈர்த்துள்ளது. இங்கிலாந்தைச் சேர்ந்த செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த அவர், விண்வெளி சுற்றுலாவில் கவனம் செலுத்துவதை நிறுத்திவிட்டு, பூமியை காப்பதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

உலகில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய திறன் படைத்தவர்கள், மனித வாழ்வுக்கு மற்றொரு கிரகத்தை தேடாமல் நமது பூமியை மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையில் மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (7-5)

# அடுக்குமாடி கட்டடத்தில் தீ 46 பேர் கருகிப் பலி

(தாய்பே)

தாய்வானில் 13 மாடிக் கட்ட டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 46 பேர் கருகிப் பலியாகினர். தாய் வானில் உள்ள கவுஷியாங் நகரில் உள்ள 13 மாடிக் கட்ட டம், அடுக்குமாடிக் குடி யிருப்பாகவும் வணிக வளாகமாகவும் இயங்கி வந்தது. இங்கு நேற்று முன்தினம் அதிகாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து சுமார் 4 மணி நேரத்துக்கும் மேல் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதில் 46 பேர் கருகி இறந்துள்ளனர்.

காயங்களுடன் மீட்கப்பட்ட 79 பேரில் 14 பேரின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தீ விபத்துக்கான விசாரணைகள் நடைபெற்று வருகிறன. (7-5)



முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் 90 ஆவது பிறந்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் ஜம்மு-காஷ்மீர் உதம்பூரில் டாக்டர் அப்துல் கலாம் உருவப்படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

# பெய்ரூட் நகரில் துப்பாக்கிச் சூடு; ஆறு பேர் பலி, 32 பேர் காயம்

(பெய்ரூட்)

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஆறு பேர் உயிரிழந்ததுடன், 32 பேர் காயமடைந்துள்ளனர்.

ஷியா முஸ்லிம் குழுக்களான ஹிஸ்புல்லா மற்றும் அதன் ஆதரவாளர்கள் ஆகியோர் கடந்த ஆண்டு நகரத்தின் துறைமுகத்தில் நடந்த மிகப்பெரிய குண்டுவெடிப்பை விசாரித்த நீதிபதிக்கு எதிராக நேற்று முன்தினம் வியாழக்கிழ்மை திரண்டதால் இந்த துப்பாக்கிச் சூடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. லெபனான் படைகளைச் சேர்ந்த வீரர்கள் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

219 பேரைக் கொன்ற பெய்ரூட் துறைமுக வெடிப்பு தொடர்பான விசாரணையில் நீதிபதி பக்கச்சார்பானவர் என்று ஹிஸ்புல்லா மற்றும் அதன் கூட்டாளிகள் கூறுகின்றனர்.

ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அவரது செயற்பாட்டை ஆதரிக்கின்றனர். நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கு பதிலளிக்கும் விதமாக பிரதமர் நஜிப் ஞ்ரீமிகடி, நேற்றைய தினத்தினை துக்க தினமாக அறிவித்தார். (7-5)

# மூன்றாம் உலகப் போர் தொடங்கி 60 ஆண்டுகள் ஆகிவிட்டன

## அமெரிக்க இராணுவ அதிகாரி

(வோஷிங்டன்)


வேற்றுக்கிரகவாசிகளால் 60 ஆண்டுகளுக்கு முன்பே மூன்றாம் உலகப் போர் தொடங்கி விட்டது என அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

ராபர்ட் சலாஸ், அமெரிக்காவின் மூத்த இராணுவ அதிகாரி ஆவார். அங்கு விமானப்படையின் உயர் பதவியில் பணியா ற்றியிருக்கிறார். அணு ஆயுதங்களை வேற்றுக்கிரகவாசிகள் திருடிச் சென்றதை தான் பார்த்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இது மட்டுமல்லாமல், அமெரிக்க விமானப்படையை சேர்ந்த தலைவர்கள் நான்கு பேர் இது குறித்த ஆவணங்களை வெளியிடவுள்ளதகவும் தெரிவித்திருக்கிறார். மார்ச் 24 ஆம் திகதி 1967 ஆம் ஆண்டே வேற்றுக் கிரகவாசிகள் இங்கு வந்து அணு ஆயுத அமைப்புகளில் மாற்றம் செய்து அதனை முடக்கி விட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

ராபர்ட் சலாஸ் அமெரிக்க விமானப்படையில் ஆயுத கட்டுப்பாட்டாளராக பணியாற்றியிரு க்கிறார். மேலும், அவர் கண்டம் தாண்டி கண்டம் பாயக் கூடிய ஏவுகணை பிரிவுக்கான கொமாண்டராகவும் பணியாற்றி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (7-5)

# உலகில் மிக உயர்ந்த பெண்



(அங்காரா)

உலகின் மிக உயரமான பெண்ணாக துருக்கியைச் சேர்ந்த ரமிசா கெல்கி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கெல்கி வீவர் சிண்ட்ரோம் என்கிற அரிய நோயால் பாதிக்கப்பட்டதால் அதன் பக்கவிளைவாக அதிகப்படியான வளர்ச்சியை அடைந்திருக்கிறார். இதனால் தற்போது இவர் 7 அடி, 0.7 அங்குல உயரத்துடன் இந்தாண்டிற்கான மிக உயரமான பெண் என கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். முன்னதாக இவரே 2014 ஆம் ஆண்டு உயரமான இளம் பெண் என கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றார். (7-5)

# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனின் உடல்நிலையில் முன்னேற்றம்

(கலிபோர்னியா)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனுக்கு திடீரென்று உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

இதையடுத்து அவர் கலிபோர்னியாவில் உள்ள இர்வின் மருத்துவமனையில் கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்பட்டார்.

75 வயதாகும் பில் கிளிண்டனை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்து மருத்துவர்கள் கண்காணித்து வருகிறார்கள்.

அவருக்கு ஏற்பட்ட பாதிப்பு கொரோனா அல்லாத தொற்றுநோய் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பில் கிளிண்டனின் செய்தித்தொடர்பாளர் ஏஞ்சல் யூரேனா தனது டுவிட்டர் கணக்கில் பில் கிளிண்டன் நல்ல மனநிலையில் இருக்கிறார். அவருக்கு சிறந்த கவனிப்பை வழங்கிய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நன்றி என்று பதி விட்டுள்ளார். (7-5)

# 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும் போகச் செய்கை இடம்பெறும்

## மன்னார் அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான பெரும்போக பயிர்ச் செய்கை தொடர்பான விசேட கூட்டம் நேற்று முன்தினம் உயிலங்குளம் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் பயிர்ச்செய்கைக்கான முதலாவது நீர் விநியோகமானது இம்மாதம் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும் இறுதி திகதியாக எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

இந்த கால போகத்திற்கு 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அதன்



அடிப்படையில் கால் நடைகளை இம்முறை புல்லறுத்தான் கண்டல், தெருவெளி, தேத்தாவடி போன்ற இடங்களில் பட்டி அடைத்து பராமரிக்கும் படி கால்நடை பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தி உள்ளோம்.

இம்முறை ஜனாதிபதியின் நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்தல் என்ற சிந்தனையின் அடிப்படையில் இயற்கை பசளையின் மூலம் குறித்த பயிர்ச் செய்கையை முன்னெடுக்க வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது.

சுமார் 60 வருடங்களின் பின்னர் முதல் முதலாக விவசாயிகள் இயற்கை பசளை மூலம் விவசாய செய்கையை மேற்கொள்ளுவதாகவும், இது ஒரு சவாலாக அமையும் எனவும், குறித்த சவாலுக்கு முகம் கொடுத்து இயற்கை பசளை மூலம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும் யூரியவின் சிறிய பகுதியாவது பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை முன்வைத்தனர். இதன் போது ஏனைய மாவட்டங்களில் முன்னெடுக்கும் பட்சத்தில் மன்னார் மாவட்டத்திலும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் மேலும் தெரிவித்தார். (7-5-285)

# கோரக்கன்கட்டு பகுதியில் இராணுவப் பொருட்கள் மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோரக்கன்கட்டு பகுதியில் இராணுவ பயன்பாட்டு பொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அண்மையில் பெய்த மழை காரணமாக புதைந்திருந்த குறித்த பொருட்கள் வெளியில் தெரிந்தன.

இதனை அவதானித்த பிரதேசவாசிகள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். குறித்த பொருட்கள் இராணுவ உபயோக பொருட்கள் எனவும், அதில் 7 கண்ணிவெடிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். குறித்த வெடிபொருட்களை அகற்றுவது தொடர்பில் நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு பின்னர் பாதுகாப்பான முறையில் அகற்றப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(7-5-100-315-316)



சுவிஸ் நாட்டில் வாழும் புலம்பெயர் உறவான தினேஸ்குமார் செல்வரத்தினத்தின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி ஊடக மையத்தினால் கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றால் தனிமைப்படுத்தப்பட்ட 12 குடும்பங்களிற்கு தலா 4000 ரூபா பெறுமதியான உலருணவு பொருட்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (படம் : சப்த சங்கரி)


# இணையவழி கதையாடல்

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணைய வழி அரங்க கதையாடல் 35 நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு எழுத்தாளர், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வேதநாயகம் தபேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளலாம். (7-5)

# டிப்பர் குடை சாய்ந்து விபத்து



(முறிகண்டி)

கிளிநொச்சி டிப்போ சந்தியில் டிப்பர் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. குறித்த விபத்து நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது. வவுனியாவிலிருந்து ஏ9 வீதி ஊடாக கிளிநொச்சி நோக்கிப்பயணித்த டிப்பர் வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. கிரவல் ஏற்றி வந்த வாகனமே கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது. குறித்த விபத்து சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

(7-5-100-316)

# வனவளத்திணைக்களத்தினரின் எல்லையிடும் செயற்பாடு மக்களால் தடுத்து நிறுத்தம்



(நெளுக்குளம்)

வவுனியா நாம்பன்குளத்தில் வன வளத்திணைக்களத்தினர் நேற்றைய தினம் மக்களின் காணிகளுக்குள் எல்லையிட முற்பட்டமையினால் மக்கள் ஒன்று திரண்டு அதனை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

வவுனியா நாம்பன்குளத்தில் 1994 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மக்கள் தமது பயன்பாட்டுக்காக வெட்டிய காணிகளை யுத்தம் காரணமாக கைவிட்டு சென்றுள்ளனர். மீண்டும் 2013 ஆம் ஆண்டு தமது காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் தருமாறு பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்திருந்த நிலையில் இதுவரை அவர்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில் குறித்த காணி மேட்டுப்பகுதியாக காணப்பட்டமையினால் கிரவல் அகழ்வதற்கு சிலரால் அனுமதி கோரப்பட்டு பிரதேச செயலாளரினால் அரச காணி என்ற அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வனவளத்திணைக்களம் குறித்த காணி தமக்கு உரியது எனவும் அதற்கு எல்லையிடுவதற்காக குழிகளை தோண்டி எல்லைக்கற்களையும் குறித்த பகுதிக்கு கொண்டு வந்திருந்தனர். இந்நிலையில் அப்பகுதி மக்கள் சிலர் ஒன்றுதிரண்டு எல்லை போடுவதற்கு தடுத்திருந்தனர்.

இதனால் வனவளத்திணைக்களத்தினர் அவ் வேலையை கைவிட்ட நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி இவ்விடயம் தொடர்பாக பிரதேச செயலாளருடன் மக்களுக்கான கூட்டம் ஒழுங்கமைத்து நடத்திய பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித் தனர். (7-5-299)



வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 21 ஆவது படைப்பிரிவின் கஜசிங்கபுரவில் அமைந்துள்ள 213 ஆவது பிரிகேட் சிப்பாய்களால் இராணுவ தினத்தை முன்னிட்டு வவுனியா தேசிய வைத்தியசாலையில் இரத்த தானம் வழங்கப்பட்டது. (படம் : யது பாஸ்கரன்)

# தேர்தலை இலக்காக வைத்து விலை அதிகரிக்கப்படவில்லை - பந்துல

**(கொழும்பு)**

**கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. அதிகரிக்கப்பட்டுள்ள பொருட்களின் விலை இவ்வருடத்திற்குள் குறைவடையும். மாகாண சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கப்படவில்லை என வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,



இவ்வருடத்திற்குள் திறைசேரி ஊடாக நிதி ஒதுக்கி அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க எதிர்பார்த்துள்ளோம்.

மாகாண சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கப்படவில்லை. விலையேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தற்போது எதிர்கொண்டுள்ள நிலைமையை அறிவார்ந்த மக்கள் புரிந்துகொள்வார்கள். எதிர்க்கட்சியினர் குறுகிய அரசியல் நோக்கத்தை கைவிட்டு மக்கள் மத்தியில் உண்மை காரணிகளை எடுத்துரைக்க வேண்டும்.

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் அரசாங்கத்திற்கு எதிராக அமையும் என்பதை நன்கு அறிவோம். அரசாங்கத்தின் விருப்பத்திற்கமைய பொருட்களின் விலை அதிகரிக்கப்படவில்லை என தெரிவித்தார். (4-5)

# தனித்து போட்டியிடும் சு.க.

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட உத்தேசித்துள்ளது என அக்கட்சி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் 'வெற்றிலை' சின்னத்தின் கீழ் கூட்டணியொன்றை அமைப்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கூட்டணியில் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில தலைமையிலான கட்சியினரையும் இணைத்துக்கொள்வதற்கான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

கூட்டணி அமைக்கும் நடவடிக்கை வெற்றியளிக்கும் பட்சத்தில் வடமேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக தயாசிறி ஜயசேகர போட்டியிடத் திட்டமிட்டுள்ளார். (4-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## ஆனந்தம் தரும் அனுமன் வழிபாடு



சொல்லின் செல்வன் என்று ராமரால் பாரர்ட்டப்பட்ட அனுமன், கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக போற்றப்படுகிறார்.

இவரைத் துதிப்போருக்கு சகல விதமான ஆனந்தங்களும் கைவரப்பெறும் என புராணங்கள் கூறுகின்றன. இதிகாச புராணங்களில் இணையற்ற இடம்பெற்று இருக்கும் அனுமன், ஈரேழு பதினான்கு உலகிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்.

ராமாவதாரத்தின் போது அனைத்து தேவர்களும் பூமியில் வானரங்களாகப் பிறந்தனர் என்றும், சிவபெருமான் ராமனுக்கு உதவிபுரிவதற்காக அதி பராக்கிரம சாலியான அனுமனை அவதரிக்கச் செய்ததாகவும் ஸ்கந்த புராணம் குறிப்பிடுகிறது.

அறிவு, உடல் வலிமை, துணிச்சல், புகழ், ஆரோக்கியம், வாக்கு சாதுர்யம், வீரம் ஆகிய அனைத்தும் ஒருங்கே அமையப்பெற ஆஞ்சநேயர் 'சிரஞ்சீவி' பட்டம் பெற்றவர்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஏ.ஆர்.ரஹ்மானை பின்தள்ளிய ஜொஹானி

(கொழும்பு)

இலங்கையின் இளம் பாடகி ஜொஹானி டி சில்வா, உலகின் புகழ் பூத்த இசைக் கலைஞர்களில் ஒருவராக போற்றப்படும் ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மானை மிஞ்சி சாதனை படைத்துள்ளார்.

யூடியூப் சனல்களில் சந்தாதாரர்களின் (subscribers) அடிப்படையில் இந்த சாதனையை ஜொஹானி படைத்துள்ளார்.

ஏ.ஆர். ரஹ்மானின் யூடியூப் சனலின் மொத்த சந்தாதாரர்கள் 2.93 மில்லியன்களாகும்.

அண்மையில் மெனிகே மகே ஹித்தே பாடலின் மூலம் பிரபல்யம் அடைந்த ஜொஹானியின் யூடியூப் சனலின் மொத்த சந்தாதாரர்கள் எண்ணிக்கை 2.96 மில்லியன் என்பது குறிப்பிடத்தக்கது. (4-5)

## மேலும் 72 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2020 ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக மொத்தம் 80,862 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (4-5)

## இரு நபர்களுக்கு இடையிலான மோதலில் ஒருவர் பலி

(கொழும்பு)

மொரட்டுவ, ஈகொட - உயன பகுதியில் இரு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றையவர் காயமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் 71 வயதான ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பத்துடன் தொடர்புடைய 26 வயதான சந்தேக நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (4-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 160 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 140 | 140 |
| தக்காளி | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 140 | 150 | 150 | 160 |
| கரட் | 100 | 160 | 200 | 200 |
| பூசணி | 80 | 60 | 60 | 60 |
| புடோல் | 140 | 140 | 120 | 150 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 160 | 260 |
| பெரிய வெங்காயம் | 140 | 170 | 150 | 180 |
| பாகற்காய் | 400 | 600 | 500 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 60 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 110 | 120 | 120 |
| பயற்றங்காய் | 350 | 250 | 200 | 300 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 250 | 250 | 280 | 280 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 280 | 320 |
| போஞ்சி | 320 | 250 | 350 | 280 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | — | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 90 | 50 | 80 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 65 | 50-70 | 50-70 |
| இராசவள்ளி | — | 300 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 350 | 300 | — | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 60 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 20 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | — | - | — | 100 |

# மார்ச் மாதத்திற்குள் 20 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர்

(கொழும்பு)

**மார்ச் மாதத்திற்குள் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் டோஸாக பைசர் தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க தேவையான அளவு தடுப்பூசி உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இதற்கு முன் எந்த தடுப்பூசி வழங்கப்பட்டு இருந்தாலும், அவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பைசர் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதே வேளை, நவம்பர் மாதத்திற்குள் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், விசேட தேவையுடையவர்களுக்கும் பூஸ்டர் தடுப் பூசிகளை வழங்க சுகாதார அமைச்சு தயாராகி வருகிறது. இதன் பின்னர் இந்த திட்டம் மற்ற வயதுடையோருக்கு விரிவு படுத்தப்படும்.

இதற்காக அனைத்து மக்களுக்கும் தேவையான எண்ணிக்கையிலான பைசர் தடுப்பூசிகள் வாங்கப்பட்டு விட்டதாகவும், பற்றாக்குறையை எதிர்கொள்ள நேரிடாது என்றும் சுகாதார நிபுணர்கள் உறுதியளித்தனர். (4-5)

# தடுப்பூசியின் வெற்றியை இலங்கை நிரூபித்துள்ளது

## இலங்கைக்கான யுனிசெப் பிரதிநிதி

(கொழும்பு)

உலகளாவிய தொற்று நோயை எதிர்கொள்ளும் போது, உலகின் சில வளர்ந்த நாடுகள் முதியவர்களுக்கு சிகிச்சை அளிக்க மறுக்கின்றன, அதே நேரத்தில் இலங்கை அத்தகைய வயதான குடிமக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துகிறது என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கான யுனிசெப் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக்குடன் சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் செயற்படுத்தப்பட்ட வீட்டு கொவிட் சிகிச்சை திட்டம் நாட்டில் கொவிட் கட்டுப்பாட்டிற்கு மிக வெற்றிகரமான முடிவுகளை அளித்துள்ளது என்றும் இதனால் மருத்துவமனைகளில் தேவையற்ற நெரிசலைத் தவிர்ப்பதன் மூலம் நோயாளிகள் தங்கள் சிரமத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

இதன்போது கருத்து தெரிவித்த இலங்கைக்கான யுனிசெப்பின் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக், இலங்கையில் கொவிட் நிலை மிக உயர்ந்த அமைப்பு மற்றும் நிர்வாகத்துடன் நிர்வகிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார். தடுப்பூசியின் வெற்றியை இப்போது இலங்கை நிரூபித்துள்ளதாகவும் கூறினார்.

அதேநேரம் எதிர்காலத்தில் இலங்கையில் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை மற்றும் வெற்றிகரமான கொவிட் நிர்வாகம் குறித்து மேலும் கவனம் செலுத்துவது முக்கியம் என்று யுனிசெப் பிரதிநிதி தெரிவித்தார். (4-5)

# ‘நாளையை நோக்கிய இலங்கை’ தேசிய நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் "நாளையை நோக்கிய இலங்கை" என்ற தேசிய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மரபு ரீதியான சிந்தனைகளைக் கடந்து, எதிர்காலத்தை நோக்கிய புதிய சிந்தனைகளின் ஊடாக மிகவும் முன்னேற்றகரமான பொருளாதார முறையை அறிவின் துணையோடு கட்டியெழுப்புவதே இதன் நோக்கமாகும். பிரதமர் அலுவலகத்தின் வழிகாட்டலின் கீழ் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம் (SLIM) செயற்படுத்தும் இத்தேசிய நடவடிக்கையின் ஊடாக கல்வித்துறையை தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்துக்காக மிகவும் சாதகமான முறையில் பயன்படுத்துவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறே அறிவை கேந்திரமாகக் கொண்ட தேசிய அபிவிருத்தியை நாட்டில் ஸ்தாபிப்பதற்கு அவசியமான வழிகாட்டலை உரிய பிரிவுகளுக்கு பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.(4-5)

# தலதாமாளிகையில் விற்பனை செய்யப்பட்ட புத்தரின் பல்லால் சர்ச்சை

(கொழும்பு)

தலதா மாளிகையில் உள்ள புத்தரின் புனித பல் ஜப்பானுக்கு விற்பனை செய்துள்ளதாகச் சிலர் கூறுகின்றனர் என ராவணா லங்கா ஜாதிக சபாவ என்ற சிங்கள அமைப்பு தெரிவித்துள்ளது.

அவ்வாறு விற்பனை செய்யப்பட்டது உண்மையான புத்தரின் புனித பல்லா அல்லது போலியான பல்லா என அந்த அமைப்பின் தலைவர் நிஷ்சங்க மாயாதுன்னே கேள்வி எழுப்பியுள்ளார்.

தலதா மாளிகையில் தற்போது வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தலதா மாளிகைக்குச் சொந்தமான காணிகள் மோசடியான முறையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக உரிய விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாகவும் நிஷ்சங்க மாயாதுன்னே குறிப்பிட்டுள்ளார். (4-5)

# இன்று ஒரு தகவல்

## முடிவுக்கு வருவது எப்படி?

வேகத்திலும் பதற்றத்திலும் எடுக்கப்படும் முடிவுகள் பெரும்பாலும் பாதகமாகவே அமைகின்றன. உடனே எடுத்தாக வேண்டிய முடிவில் கூடப் பதற்றத்தைக் காண்பிப்பது விவேகமாகாது.

எந்த ஒரு விடயத்தில் முடிவுக்கு வருவதற்கு முன்னும்–அது எத்தகைய அவசர காரியமாக இருந்தாலும்–சில நொடிகளேனும் சிந்தித்து முடிவுக்கு வருவது நல்லது.

சிந்தனை செய்வது என்றால், செய்வதா வேண்டாமா என்று மனதைப் போட்டுக் குழப்பிக்கொள்வதா? அல்ல! பின்னே? சிந்திப்பது என்பதன் உண்மையான பொருள், நாம் முடிவெடுக்க வேண்டிய விடயத்தில் ஆழப் பதிந்து கிடக்கும் நன்மை தீமைகளை அலசிப் பார்ப்பதே ஆகும்.

நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்க்கும் போது தான் மனதில் ஒரு தெளிவு பிறக்கிறது. இந்த நிலையில் நன்மைகள் அதிகம் இருந்தால் சரி என்றும், தீமைகள் அதிகமிருந்தால் வேண்டாம் என்றும் எளிதில் ஒரு முடிவுக்கு வர முடியும்.

இப்படிச் சிந்தித்து முடிவுக்கு வருபவர்களின் முடிவெல்லாம் பெரும்பாலும் வெற்றி தரக் கூடியதாகவே இருக்கும். சற்று வித்தியாசமாக எண்ணாதவர்கள் ஒரு சிறு துண்டுக் காகிதத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம்முன் தோன்றியுள்ள பிரச்சனையில் உள்ள நன்மைகளையெல்லாம் ஒருபுறம் எழுத வேண்டும். தீமைகளையெல்லாம் மறுபுறம் எழுத வேண்டும். நன்மை அதிகமாக இருந்தால் செய்யலாம் என்றும், தீமை அதிகமாக இருந்தால் வேண்டாம் என்றும் முடிவுக்கு வரலாம்.

ஆனால் ஒரே ஒரு பெரிய நன்மைக்காகப் பல சிறு தீமைகளை அடைய நேரும் சமயத்தில் எப்படி முடிவுக்கு வருவது என்ற பிரச்சனை இங்கே எழுகிறது.

இந்த சமயத்தில் ஒரு நீதிபதியின் நிலையிருந்து, ஒவ்வொரு சிறு தீமைக்கும் மதிப்பெண்கள் கொடுக்க வேண்டும். மிகப்பெரிய நன்மை ஒன்று இருக்கிறது அல்லவா, அதற்கும் மதிப்பெண் கொடுக்கலாம். எந்த மதிப்பெண்கள் அதிகமாக இருக்கிறதோ அதனைச் சார்ந்து முடிவுக்கு வரலாம்.

ஆரம்பத்தில் சிந்திக்காமல் முடிவெடுத்தவர்கள், இடையில் சில தடங்கல்கள் வந்தால் அயர்ந்து உயர்ந்து விடுவார்கள். இதற்கு, நாம் எடுத்தது சரியான முடிவு தானா என்ற சந்தேகமே காரணம்.

முடிவுகள் உணர்ச்சிகளில் உருவெடுக்காமல் உணர்வுகளில் விளைந்ததாக இருந்தால் நல்லது. மேற்கூறிய முறைகளைக் கடைப்பிடித்து முடிவுக்கு வருபவர்களுக்கு, நடுவில் தடங்கல் ஏற்பட்டாலும் தாம் எடுத்த முடிவு சரிதானா என்ற சந்தேகமே எழாது.

மாறாக– நாம் மிகச் சரியான முடிவைத் தான் எடுத்திருக்கின்றோம் என்ற உற்சாகத்தை உள்ளுணர்வு கொடுத்துக்கொண்டே இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## யாருக்கு வலிமை அதிகம்

சிற்பி ஒருவர் கல்லில் சிலை வடித்துக் கொண்டிருந்தார். திடீரென்று சத்தம் கேட்டுத் திரும்பினார்.

பதற்றத்தோடு ஓடி வந்த ஒருவர், "மண்டியிட்டு உட்காருங்கள். தலை தாழ்த்தி வணக்கம் சொல்லுங்கள்" என்று கத்தினார்.

அவரைப் பின்தொடர்ந்து, ஒரு யானை மிகவும் கம்பீரமாக நடந்து வந்தது. மன்னர் யானையில் ஏறி நகர் வலம் வருகிறார் என்று புரிந்து கொண்ட சிற்பி, மண்டியிட்டு வணங்கினார்.

உயரமான இடத்தில் யானை முதுகில் உட்கார்ந்திருந்த மன்னர், சிற்பியைக் கவனிக்கவில்லை. அதனால், சிற்பிக்கு வருத்தமாகிவிட்டது.

'நான் சாதாரண சிற்பி. பட்டத்து யானைக்கு இந்த நாட்டு மன்னரைச் சுமக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது' என்று நினைத்த சிற்பி, 'நான் ஒரு யானையாக இருந்தால் எனக்கும் அப்படி ஒரு வாய்ப்பும் மரியாதையும் கிடைக்குமே' என்று முணுமுணுத்தார்.

அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. சிற்பி பட்டத்து யானை யாக மாறியிருந்தார்! மன்னரைச் சுமந்து கொண்டு ஊர்வலம் சென்றார்.



திடீரென்று மன்னர் கையிலிருந்த தேநீர்க் கோப்பை நழுவி விழுந்தது. தேநீர் யானையின் முதுகில் கொட்டியது. யானையாக இருந்த சிற்பிக்கு ஒரு யோசனை. 'நான் மன்னனாக இருந்திருக்கலாம்! வசதியான வாழ்க்கை வாழ்ந்திருப்பேன்.

மக்கள் மனத்தில் இடம் பிடித்திருப்பேன். எல்லோரும் தலை குனிந்து வணங்குவார்கள். அதிகாரம் மிக்கவனாக வலம் வந்திருப்பேன்' என்று நினைத்தார்.

உடனே சிற்பி அந்த நாட்டின் மன்னரானார். தன் அதிகாரத்தை எண்ணியும் மக்கள் மத்தியிலுள்ள மரியாதையையும் கண்டு வியந்தார். (தொடரும்)

# மகாபாரதம்




தண்டனையே ஒரு அரசின் ஆணிவேர் எனத் தகும். பெரிய மரம் ஆணிவேர் அறுந்தால் கீழே விழும். அதன் கிளைகள் முறியும்.

அதுபோலவே தண்டனையில்லை எனில் ஆட்சி எனும் மரம் ஆணிவேர் அற்ற மரம் போல சாயும். அரசின் கிளை போன்ற மக்களும் பாதுகாப்பின்றித் துன்புறுவர்.

அறிவு மிக்க அரசன் பகைவனை வேருடன் களைய முற்பட வேண்டும். பின் அப்பகைவனுக்கு உதவியாக வருபவர்களையும் தொலைக்க வேண்டும்.

சொல்லில் பணிவும், மனதில் பகை போக்கும் எண்ணமும் நிலைத்திருக்க வேண்டும். பகைவனுடன் சேர்ந்து ஆற்ற வேண்டிய பணியில் அவனிடம் சமாதானம் செய்து கொள்ள வேண்டும். அதேநேரம் முழுமையாக அவனை நம்பக் கூடாது.

பாம்புடன் பழகுவது போல பகைவனிடம் பயந்தே பழக வேண்டும். எண்ணம் ஈடேறும் வரை பகைவனைத் தோளில் சுமக்க வேண்டும். வாய்ப்புக் கிடைக்கும் போது கீழே தள்ளித் தாக்கி வெற்றி காண வேண்டும்.

செல்வத்தை விரும்பும் மனிதன் பணிவுடன் இருக்க வேண்டும். இன்சொல் கூற வேண்டும். பிறருக்கு வணக்கம் செலுத்த வேண்டும்.

வாழ்கின்ற காலம் குறைவாக இருந்தாலும் மின்னல் போல ஒளி விட வேண்டும். உமியில் உள்ள தீயைப் போல ஒளியின்றி நெடுங்காலம் புகைந்து கொண்டிருக்கக்கூடாது.

மேலும் நன்றி கெட்டவரிடம் கொடுக்கல்-வாங்கல் கூடாது. நன்றி கெட்டவர்கள் காரியம் ஆகும் வரை நல்லபடியே இருப்பர். ஆனதும் நம்மை அவமதிப்பர்.

மன்னன், குயில், தான் பாதுகாக்க வேண்டியதை வேறொன்றைக் கொண்டு (காகத்தின் மூலம்) பாதுகாப்பது போல், உழவு, வாணிபம் முதலிய வற்றில் பிறர் உதவி கோர வேண்டும்.

கோரை முதலியவற்றை வேருடன் உண்ணும் பன்றியைப் போல மன்னன் பகையை வேருடன் களைய வேண்டும். (தொடரும்)

*வீரம் நம் உடம்பின் ஆற்றல் அல்ல. அது, நம் உள்ளத்தின் பண்பு.*

*– காந்திஜி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விதுரன் போர்க்களம் செல்ல மறுத்ததன் காரணம் யாதோ!

பாரதப் போரில் வில்லெடுத்து போர்க்களம் புகமாட்டேன் என்று கூறி, கௌரவர் சபை தனில் வில்லை முறித்தவன் விதுரன்.

அதனால் வில்லுக்கு விதுரன் என்ற மிகப் பெரும் கௌரப் பெயரை இழந்தவன். விதுரன் வில்லெடுத்து பாண்டவர்களை எதிர்த்திருப்பானாயின் பாண்டவர் சேனையில் எவரும் மிஞ்சியிருக்க மாட்டார்கள்.

அந்தளவுக்கு விதுரனே வில்லுக்குரியவன்.

எனினும் அவன் போரிட மறுத்ததால், அவனின் வில்லாற்றல் பற்றிய விமர்சனங்கள் அமிழ்ந்து போயின.

ஆயினும் நீதியை நிலைநாட்டியவன் என்பதால் விதுர நீதி என்று புகழ்படுமளவில் அவனின் செயல் உயர்ந்து நிற்கிறது.

இதை நாம் கூறும்போது பீஷ்மர், துரோணர், அசுவத்தமா என்போர் கௌரவர் தரப்பில் நின்று போரிடும்போது, விதுரன் மட்டும் எதற்காகப் போரிட மறுத்தான் என்று வினாத் தொடுப்பவர்களும் உளர்.

இதற்குப் பதில் அளிப்பவர்கள்; பாண்டவர்கள் மீது அளவு கடந்த விசுவாசம் கொண்டதன் காரணமாகவே விதுரன் குருசேத்திரத்தை தவிர்த்தான் என்று கூறுவர்.

ஆனால் நம்மைப்பொறுத்தவரை அது உகந்த பதிலன்று.

மாறாக, எவ்வளவுதான் மோசமான நிலைமை ஏற்பட்டாலும் சகோதரர்கள் சண்டையிடக்கூடாது என்பதில் விதுரன் மிகவும் உறுதியாக இருந்தான்.

அதனாலேயே வில்லை முறித்து போர் செய்ய மறுத்தான் எனலாம்.

இதை நாம் கூறும்போது, அது சரி இப்போது விதுர காதை எதற்கானதென்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் எங்கள் மீனவச் சகோதரர்களும் தமிழகத்து மீனவச் சகோதரர்களும் முரண்படுகின்ற விவகாரம் எழுகை பெறுகின்றது.

ஆம், தமிழகத்து மீனவர்கள் எங்கள் சகோதரர்கள். ஈழ மண்ணில் போர் நடந்த வேளையில், இங்கு இருக்க முடியாது என்று நம்மவர்கள் புலம்பெயர்ந்தபோது, எங்கள் உறவுகளை தமிழகத்துக் கரைக்குக் கொண்டு சென்ற பேருதவியைச் செய்தவர்கள் தமிழக மீனவர்கள்.

தவிர, எங்கள் மீனவர்கள் பட்ட – படுகின்ற துன்பங்களை நன்கு அறிந்தவர்கள் அவர்கள்.

அப்படியிருந்தும் இப்படியானதொரு அவல நிலைமை ஏற்பட்டமை மிகுந்த வேதனையைத் தருகிறது.

எனவே கடல் எல்லை தாண்டுகின்ற விவகாரம் தொடர்பில் தமிழகத்தின் தலைவர்களுடன் நம் தமிழ் அரசியல் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

குறிப்பாக, தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் எங்களுக்காக அன்று முதல் இன்று வரை குரல் கொடுத்து நிற்கும் பழ.நெடுமாறன், வை.கோபாலசாமி, நாஞ்சில் சம்பத், சீமான் போன்றவர்களுடன் கதைத்துப் பேசி ஒரு சுமுகமான தீர்வை எட்டுவதற்கு நம் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் எம் புலம்பெயர் உறவுகள் முன்வர வேண்டும்.

எம்மைப்பொறுத்தவரை நாம் சகோதரர்கள், எங்களுக்குள் ஏற்படுகின்ற முரண்பாடுகள் எங்களைப் பலவீனமாக்கும். எதிரிக்குப் பலமாக அமையும்.

ஆகையால் எப்பாடுபட்டும் மீனவர் பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வு காணுங்கள் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

## ஆன்மீகப் பற்றாளராக வாழ்ந்த அமரர் காசிநாதர் சிவபாலன்

**"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் தோன்றாமை நன்று"**

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்து மறைந்தவர்தான் அமரர் சைவத்திரு காசிநாதர் சிவபாலன் அவர்கள். மண்புகழும் மட்டுவில் மண்ணிலே அருளாட்சிசெய்யும் அன்னை பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்பாள் ஆலயச் சூழலிலே அமரர்களான காசிநாதர் - சிவகாமசுந்தரி தம்பதிகளின் இரண்டாவது மகனாக 1952 ஆம் ஆண்டு 03 மாதம் 26 ஆம் திகதி அவதரித்த இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்திலும் தொடர்ந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார். சைவசமய ஒழுக்கங்களையும் அனுட்டானங்களையும் பின்பற்றி சுத்த சைவபோஷனம் பேணுபவராக வாழ்ந்து இறை தொண்டனாக, ஒரு பதிப்பாசிரியராக, சிறந்த ஒப்பு நோக்குநராக, ஒரு சமூக சேவகனாக, நைட்டிகப் பிரமச்சாரியாக, ஞாயிறு தோறும் மௌன விரதம் அனுட்டிப்பவராக பலபரிமாணங்களில் தன்னை இவ்வுலகிற்கு அடையாளங் காட்டிய பெருந்தகையாக மிளிர்ந்தார்.

ஆசிரியரான இவரது தந்தையார் காசிநாதரின் வழிப்படுத்தலில் வளர்ந்த இவர் தனது 26 வயதில் 1978 ஆம் ஆண்டு முதல் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தொண்டனாக இணைந்து அன்னை துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வழிகாட்டலில் அவரது போதனைகளை அருகிருந்து கேட்டு சிறந்த ஓர் ஆன்மீகவாதியாகவும் இறை பக்தியாளராகவும் எப்பொழுதும் புன்னகை மிளிரும் வதனம், நீண்ட வெண்ணிறச் சடாமுடி. நீண்டு வளர்ந்த வெண்ணிறத் தாடி. வெண்ணிற வேட்டியும் சட்டையும் என அவரது தோற்றம் காண்போர் மனதைக் கவரும்.

ஆலய அறப்பணிகளிற்கு மேலாக அரிய பல நூல்களைத் தேடிப் பதிப்பித்து வெளியிடும் அரும் பணியையும் இவர் ஆற்றியிருந்தார். நீர்வேலி சி.சிதம்பரப்பிள்ளை அவர்கள் எழுதிய "மட்டுவில் தந்த பண்டிதமணி சி.க", திரு.த.சண்முகசுந்தரம் அவர்கள் எழுதிய "சிவத் தமிழ்ச் செல்வம்", "ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் மூலமும் உரையும், "A Home in A Kingdom", திருமதி மங்கையற்கரசி லோகேஸ்வரன் எழுதிய "கோவைப் பதியில் சைவமும் தமிழும்", பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஞாபக வெளியீடான "Papers Presented At the Fourth International Conference Seminar of Tamil Studies", "மாவைக்கந்தன் ஆலயத் திருத்தல வரலாறு" ஆகிய நூல்கள் இவரது பதிப்பில் வெளிவந்த சில நூல்களாகும். இத்தகைய மனிதப் பண்பாளர் மறைந்து இரண்டு ஆண்டுகள் கடந்தபோதிலும் அவரின் நினைவுகள் என்றும் நமக்கு வழிகாட்டியாக அமையும் என்பது திண்ணம்.

**"வயலூரான்"**
**செ.சுதாகரன்**
முகாமைத்துவ உதவியாளர்
தென்மராட்சி பிரதேச செயலகம்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வே... ... ளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 17 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** இணுவில், மருதனார்மடம் சந்தை. பாலாவோடை, விஜிதா அரிசி ஆலை, கோண்டாவில் புகையிரத நிலைய வீதி, மாப்பியன், சுதுமலை, பத்தனை, தாவடி, உப்புமடம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** தேவிபுரம் 18 ஆவது வி.ஜ.ஆர். இராணுவமுகாம், இரணைப்பாலை 68 ஆம் பிரிவு இராணுவ முகாம், இரணைப்பாலை 68 ஆவது பிரிவு- டயலொக் கோபுரம், தேவிபுரம், தேராவில் 683 ஆம் பிரிவு இராணுவமுகாம், வெள்ளப்பள்ளம் சந்தி, டயலொக் கோபுரம்- வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு இடைக்காட்டுச்சந்தி, இனிய வாழ்வு இல்லம், இருட்டு மடு, குரவில், மூங்கிலாறு வடக்கு, சுதந்திரபுரம், தேரா வில், உடையார்கட்டு, உடையார்கட்டு பாடசாலையடி, வள்ளிபுனம், வெள்ளப்பள்ளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும். (4-5)

## அரசாங்கம் மக்களிடம் அடிவாங்க நேரிடும்

### வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமையில் மாகாண சபைத் தேர்தலை நடத்தினால், அரசாங்கம் மக்களிடம் அடிவாங்க நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

"மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க வாக்காளர்கள் வரிசையில் நிற்பதற்கு பலம் இருக்குமாயின் அது பெரிய விடயம்.

இப்படியான சந்தர்ப்பத்தில் தேர்தலை நடத்தினால், அடிவாங்க நேரிடும். இதனால், முதலில் சட்டத்தை உருவாக்க வேண்டும்.

ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உறுப்பினர் என்ற வகையில் மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை உருவாக்கினால் நல்லது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு மக்களை கொண்டு செல்லும் முன்னர் அவர்களை வாழவைக்க முயற்சிக்க வேண்டும்" என்றார். (ஞா)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### விரிந்த உள்ளம் வேண்டும்

❖ நம் ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற ஆற்றலும், தூய்மையும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கின்றன.

❖ என்னால் முடியும் என்று நினைத்து செயலாற்றினால் அனைத்தையும் செய்து முடிப்பீர்கள்.

❖ மனிதனைப் பிணைத்திருக்கும் பந்தம் என்னும் கட்டுகள் அனைத்தும் கடவுளின் கருணையால் மட்டுமே அவிழும்.

❖ தூய்மையான நல்லெண்ணம் கொண்டவர்கள் இந்தப் பிறவியிலேயே கடவுளைக் காணும் பேறு பெறுவர்.

❖ உலகத்தைப் போல நம் உள்ளமும் பரந்து விரிந்ததாக இருக்கட்டும்.

❖ மனிதனை உருவாக்குவதில் இன்ப துன்பம் இரண்டும் சமமான இடத்தைப் பெறுகின்றன.


❖ தன்னைச் சரிபடுத்திக் கொண்டால் உலகையும் சரிப்படுத்தும் தகுதியைப் பெற முடியும்.

❖ இன்பத்தை விட துன்பமே சிறந்த ஆசானாக இருந்து நமக்கு வழிகாட்டுகிறது.

❖ மனித உயிர் தெய்வத்தன்மை கொண்டது. ஆனால், ஜடப்பொருளின் கட்டுக்குள் அகப்பட்டு கிடக்கிறது.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

20



கலாநிதி க.தவலிங்கம் ஒய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

அமெரிக்க வீரர்கள் ஆப்கானிஸ்தானில் எதற்காக உயிரிழக்க வேண்டும்?, எதற்காக அமெரிக்காவின் கஜானாவிலிருந்து கோடிக் கணக்கான டொலர்கள் தலிபான்களுடன் நடக்கும் போருக்கு செலவிட வேண்டும் என்ற உணர்வு அமெரிக்க மக்களிடம் எழுந்ததால் 2018 செப்டெம்பரில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்கப் படைகளை திரும்பப் பெறும் வகையில் தலிபான்களுடன் பேச்சு நடத்த அமெரிக்க அதிகாரி ஜல்மேகலிஜாத்தை நியமித்தார். 2019, நவம்பர் 24 ஆப்கானிஸ்தான் சென்று அமெரிக்கப் படைகளை ஜனாதிபதி ட்ரம்ப் பார்வையிட்டார். தலிபான்களுடன் அமைதி ஒப்பந்தம் குறித்த பேச்சை ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார். தொடர்ந்து பிடன் அரசாங்கமும் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படையை திரும்பப்பெறும் நடவடிக்கையை மேற்கொண்டது.

**அமெரிக்க வீரர்கள் ஆப்கானிஸ்தானில் எதற்காக உயிரிழக்க வேண்டும்?, எதற்காக அமெரிக்காவின் கஜானாவிலிருந்து கோடிக்கணக்கான டொலர்கள் தலிபான்களுடன் நடக்கும் போருக்கு செலவிட வேண்டும் என்ற உணர்வு அமெரிக்க மக்களிடம் எழுந்ததால் 2018 செப்டெம்பரில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்கப் படைகளை திரும்பப் பெறும் வகையில் தலிபான்களுடன் பேச்சு நடத்த அமெரிக்க அதிகாரி ஜல்மே கலிஜாத்தை நியமித்தார்.**

பெப்ரவரி 2020 இல், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் நேட்டோ கூட்டாளிகள் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க போர் படைகளை முறையாக திரும்பப் பெற அனுமதித்து, தலிபான்களுடன் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க ஒப்புக் கொண்டனர். 2020, பெப்ரவரி 29, அமெரிக்கா, தலிபான் இடையே கட்டார் தலைநகர் டோஹாவில் அமைதி ஒப்பந்தம் கையொப்பமானது.

தலிபான் தீவிரவாதிகள் தரப்பில் கொமாண்டர் முல்லாபராதர், அமெரிக்கா தரப்பில் வோஷிங்டன் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் ஜல்மேகாலிஜாத் ஆகியோருக்கு இடையே டோஹா ஹோட்டலில் ஒப்பந்தம் கையொப்பமானது. இருவரும் கையொப்பம் செய்த பின் கைகுலுக்கிக் கொண்டு, இஸ்லாமிய முறைப்படி இறைவனுக்கு வணக்கம் செலுத்தினர்.

**தலிபான் தீவிரவாதிகள் தரப்பில் கொமாண்டர் முல்லா பராதர், அமெரிக்கா தரப்பில் வோஷிங்டன் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் ஜல்மேகாலிஜாத் ஆகியோருக்கு இடையே டோஹா ஹோட்டலில், 2020 பெப்ரவரி 29 இல், அமெரிக்கப் படையை திரும்பப்பெறும் நடவடிக்கையை மேற்கொள்ளும் ஒப்பந்தம் கையொப்பமானது.**

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக்பொம்பியோ கூறுகையில், "இந்த ஒப்பந்தம் சிறப்பானது. ஆனால், ஒப்பந்தத்தில் உள்ளபடி, தலிபான்கள் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றி அல்கொய்தா தொடர்பை துண்டிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறுகையில், "ஆப்கான் மக்களுக்கு மிகப் பெரிய எதிர்காலம் காத்திருக்கிறது. தலிபான்களும், ஆப்கான் அரசும் ஒப்பந்தத்தில் உள்ளபடி செயற்பட்டால், ஆப்கானில் போரை முடிப்பதற்கு நமக்கு வலிமையான பாதை காத்திருக்கிறது, எங்கள் படைகளையும் திரும்ப அழைப்போம்" எனத் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தின் படி அடுத்த 14 மாதங்களில் அமெரிக்க இராணுவம், நேட்டோ படைகள் ஆப்கானில் இருந்து வெளியேறும். முதல் கட்டமாக அடுத்த 135 நாட்களில் 8,600 வீரர்கள் வெளியேறுவார்கள் என்று சொல்லப்பட்டது. நேட்டோ படையின் பொதுச் செயலாளர் ஜென்ஸ்ஸ்டோலன் பெர்க் கூறுகையில், "ஆப்கானிஸ்தானில் அமைதி கொண்டு வருவதற்கு முதல் படி, அமைதியை ஏற்படுத்துவதற்கான பாதை நீண்டது, கடினமானது. அமைதி என்பது எளிதாக இங்கு வரவில்லை, ஏராளமானவற்றை இழந்திருக்கிறோம். ஆனால், இதுதான் முதல்படி" எனத் தெரிவித்தார்.


**"ஆப்கானிஸ்தானில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம்" என்ற தலைப்பில் இந்த ஒப்பந்தம், அமெரிக்க மற்றும் நேட்டோ படைகள் தீவிரமாக விலகி, 1 மே 2021 க்குள் அமெரிக்கப் படைகளை முழுமையாக திரும்பப் பெறுவதற்கான காலக்கெடுவை நிர்ணயித்தன. அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக்பொம்பியோ கூறுகையில், "இந்த ஒப்பந்தம் சிறப்பானது. ஆனால், ஒப்பந்தத்தில் உள்ள படி, தலிபான்கள் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றி அல்கொய்தா தொடர்பை துண்டிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார். தலிபான் தீவிரவாத அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாகித் கூறுகையில், "இந்த அமைதி ஒப்பந்தம் கையொப்பமான பின் எங்கள் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நாடு முழுவதும் எங்கள் இராணுவ நடவடிக்கையை நிறுத்தி இருக்கிறோம் . இனிமேல் எந்த காரணத்தைக் கொண்டும் ஆப்கானிஸ்தான் மண்ணில் ஜிகாதி இயக்கங்களான அல்கொய்தா, ஐ.எஸ். தீவிர வாதிகளுக்கு இடமில்லை" எனத் தெரிவித்தார்.**

தலிபான் தீவிரவாத அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாகித் கூறுகையில், "இந்த அமைதி ஒப்பந்தம் கையொப்பமான பின் எங்கள் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நாடு முழுவதும் எங்கள் இராணுவ நடவடிக்கையை நிறுத்தி இருக்கிறோம் . இனிமேல் எந்த காரணத்தைக் கொண்டும் ஆப்கானிஸ்தான் மண்ணில் ஜிகாதி இயக்கங்களான அல்கொய்தா, ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு இடமில்லை" எனத் தெரிவித்தார்.

"ஆப்கானிஸ்தானில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம்" என்ற தலைப்பில் இந்த ஒப்பந்தம், அமெரிக்க மற்றும் நேட்டோ படைகள் தீவிரமாக விலகி, 1 மே 2021 இற்குள் அமெரிக்கப் படைகளை முழுமையாக திரும்பப் பெறுவதற்கான காலக்கெடுவை நிர்ணயித்தன.

### ஜனாதிபதி அஷ்ரப்கானி ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறல்.

2 ஒகஸ்ட் 2021 அன்று, ஆப்கானிஸ்தானில் இருந்து தலிபான்களின் முன்னேற்றத்திற்கு அமெரிக்க துருப்புக்கள் திடீரென திரும்பப் பெறுவதை கானி குற்றம் சாட்டினார். மற்றும் தலிபான்கள் பயங்கரவாத அமைப்புகளுடனான உறவை குறைக்கவில்லை என்றும் பெண்களுக்கு எதிரான தாக்குதல்களை அதிகரித்துள்ளார்கள் என்றும் குற்றம் சாட்டினார். ஒகஸ்ட் 11, 2021 அன்று, கானி உள்ளூர் போர் வீரர்கள் மற்றும் தனியார் போராளிகளிடம் தலிபான்களை எதிர்த்துப் போராடுமாறு வேண்டுகோள் விடுத்தார், மேலும் தலிபான்களுக்கு எதிரான மக்கள் எழுச்சிக்கும் வேண்டுகோள் விடுத்தார்.




நன்றி BBC

(தொடரும்...)

## நிர்வாகக்...

செய்யாவிடின் தன்னை விமர்சிக்குமாறும் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்ற அன்றைய தினமே தனது கடமைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் இருவரும் மாகாண நிர்வாகக் கட்டமைப்பில் புதியவர்கள். அந்த சவால் எப்படி இருக்கும் என்ற கேள்விக்கு,

"அப்படி எதுவும் இல்லை. இருவருக்கும் அனுபவம் உண்டு. பெரிய குழுக்களுடன் பணியாற்றுபவர்கள்" என்று ஆளுநர் ஜீவன் தியாகராஜா பதிலளித்தார்.

வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் 21ஆம் திகதி தரம் 1 - 5 வரையிலான 639 பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன என்று ஆளுநர் கூறினார். (ஞா)

## 20 பேர்...

னர்.

இதன் அடிப்படையில் இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 449 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## சாவகச்சேரியில்...

டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் குறித்த விபத்து இடம்பெற்றிருந்தது.

படுகாயம் அடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுவந்த நிலையில் நேற்று முன்தினம்இரவு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த நிரோஜன் (வயது - 24) என்றும் அண்மையிலேயே வெளிநாடு ஒன்றிலிருந்து நாடு திரும்பியிருந்தவர் என்றும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

(ஞா-30,33,60)

## மோசடி வழக்கு...

கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று குறித்த உத்தரவினை பிறப்பித்துள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, உள்ளூர் அதிகாரிகளுக்கு GI குழாய் வழங்குவதாக 36 மில்லியன் ரூபாய் அரச நிதிகளை மோசடி செய்ததாக பசில் மற்றும் கித்சிறிக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே இருவரையும் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஞா)

## வயோதிபர்...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆண்டியார்வளவு வைரவர் கோவிலடி, புலோலி தெற்கைச் சேர்ந்த பெரியதம்பி கணேசராசா (வயது - 85) என்பவராவார்.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணகளை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

(ஞா-60)

## இழுவைப் படகு...

புப் பேரணியொன்று இடம் பெறும்.

இழுவைப்படகு தடைச்சட்டத்தை முறையாக அமுல்படுத்துமாறு கடற்றொழில் நீரியல்துறை அமைச்சரை கோருவதே இப்பேரணியின் நோக்கமாகும். (ஞா-60)

## கிண்ணம்...

ஐபிஎல் தொடரில் சென்னை சம்பியனாகியது.

14ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று டுபாயில் நடந்தது. இதில் சென்னை - கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்கள் குவித்தது.

193 ஓட்டங்கள். எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா 9 விக்கெட் இழப்புக்கு 165 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதனால் சென்னை 28 ஓட்டங்களால் வெற்றி பெற்று மகுடம் தரித்தது. (ஞா)

## மாகாணத்...

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் தேர்தல் சம்பந்தமாக எந்தவித பேச்சுவார்த்தைகளும் நடைபெறவில்லை. எல்லாக் கட்சிகளும் இணைந்து சில விடயங்களை அரசாங்கத்துடன் பேச முடியுமா என்பது தொடர்பாகவே ஆராயப் பட்டு வருகின்றது.

அதில் தேர்தல் சம்பந்தமான பேச்சுக்கள் இதுவரை எழவில்லை. என்னை பொறுத்தவரையிலே மாகாண சபை தேர்தலை அரசாங்கம் தற்போதைக்கு நடத்தாது என்பதே என்னுடைய கருத்து. அரசாங்கத்திடம் பணமில்லை. கருத்துக் கணிப்பு மூலமாக அரசாங்கம் தனக்குள்ள ஆதரவு குறைந்ததை உணர்ந்துள்ளது.

ஆகவே மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் பிரச்சினை ஆகிவிடும் என்கிற அடிப்படையில் அவர்கள் தேர்தலை தள்ளி வைக்கவே விரும்புவார்கள்.

அரசாங்கத்திற்கு மாகாண சபையை தொடர்ந்தும் வைத்திருக்கக் கூடாது என்ற எண்ணமே இருக்கிறது. புதிய அரசியல் யாப்பின் மூலம் மாகாண சபை முறையை நீக்கி முற்றிலும் சிங்கள பௌத்த அரசியலமைப்பை கொண்டு வருவார்களோ என்பது எனது சந்தேகம்.

தற்போது மாகாண சபை தேர்தலை நடத்துவது அரசாங்கத்திற்கு நன்மையைத் தராது தீமையையே தரும் என்ற அடிப்படையிலே மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது என்பதே என்னுடைய கருத்து என்றார். (ஞா-33)

## எரிபொருள்...

பாடு இந்திய ஒயில் நிறுவனத்தினால் (IOC) இடைநிறுத்தப்பட்டுள்ளதாக எல்.ஐ.ஓ.சி எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அண்மையில் அறிவித்திருந்தது.

இதற்கமைய ஒரு லீற்றர் டீசல் 25 ரூபாயினாலும், ஒரு லீற்றர் பெற்றோல் 15 ரூபாயினாலும் அதிகரிக்க எதிர்பார்ப்பதாக அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். (ஞா)

## பயண...

எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் வரும் விடுமுறையுடன் ஆரம்பமாகும் நீண்ட வார இறுதி விடுமுறைகள் காரணமாக மாகாணங்களுக்கு இடையிலான எல்லைகளில் கடுமையான சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளதாக ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஞா)

## 120...

விலை உயர்வைக் கோரியுள்ளது.

பால்பண்ணையாளர்களை பாதுகாக்கும் தேசிய மைய தலைவர் சுசந்த குமார நவரத்ன இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில், ஒரு லீற்றர் பால் உற்பத்தி செலவு கடுமையாக உயர்ந்துள்ளது. கால் நடை மருந்து மற்றும் வேலை சிகிச்சை, தீவனம் மற்றும் தாதுக்களின் விலையும் உயர்ந்துள்ளன என்று அவர் கூறியுள்ளார். (ஞா)

## புதிய சுகாதார...

குறித்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில், திரையரங்குகள் 25 வீத இருக்கைகளுடன் திறப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது.

திருமண நிகழ்வுகளுக்கு மண்டபத்திற்கு உள்ளே 50 பேரையும் வெளியேயாயின் 75 பேரையும் பங்கேற்க அனுமதிக்கப்படுகிறது.

கொரோனா தவிர்ந்த மரணச் சடங்குகளுக்கு 20 பேருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

வீட்டுக்குள் நடத்தப்படும் விருந்துபசார நிகழ்வுகள் உள்ளிட்ட அனைத்து வகையான உள்ளக மற்றும் வெளியக விருந்துபசாரங்களுக்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோவில்கள், தேவாலயங்கள் போன்ற வழிபாட்டுத் தலங்களில் கூட்டு நடவடிக்கைகள் அல்லது கூட்டங்களுக்கு அனுமதி இல்லை.

பாடசாலைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கல்வி வகுப்புகள் நடத்த எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களை சுகாதார வழிகாட்டலுக்கு அமைய ஆரம்பிக்க முடியும்.

முன்பள்ளிகளை 50 சதவீத மாணவர் கொள்ளளவை கொண்டு முன்னெடுக்க முடியும். பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஞா)


மெகா பவர்
திகதி 15/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0904
J 03 18 54 58 67

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/10/15 1620 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 8 வெற்றி இலக்கங்கள் 12 17 40 46

மஹஜன சம்பத
திகதி 2021/10/15
சீட்டிழுப்பு இலக்கம் 4556
M 9 6 0 6 1 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2851
Q 02 24 44 68

தன நிதானய
திகதி -2021.10.15
சீட்டிழுப்பு இலக்கம் - 586
C 24 47 69 77

அத கோடிபதி
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1359
சீட்டிழுப்பு திகதி: 15.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,167,054
வெற்றி இலக்கங்கள் 11 22 43 44 D

சனிதா
சீட்டிழுப்பு இல: 9694
சீட்டிழுப்பு திகதி: 15.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 35,624,328.90
வெற்றி இலக்கங்கள் 43 46 53 57 A

சுப்பர் ஜக்பொட் 2,156,007.40/=
திகதி: 15.10.2021
வெற்றி வாரம்: 3245
வெற்றி இலக்கங்கள் 05 13 33 60 கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,634,660./=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1533
சீட்டிழுப்பு திகதி 15.10.2021
U 20 27 62 74
அடுத்த சுப்பர் ஜக்பொட 65,978,476.40/=

T 05 43 52 76
752
15.10 2021
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,562,755

# எமது உரிமையினை வெல்வதற்கு பாரத தேசம் துணை நிற்க வேண்டும்

## யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது உரிமையினை வெல்வதற்கு பாரத தேசம் எமக்கு துணை நிற்க வேண்டும் என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். பொது சன நூலகத்தில் நேற்று இடம் பெற்ற அப்துல் கலாமின் 90 ஆவது பிறந்த நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வி.மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது உரிமை கோரிக்கையை வெல்வதற்கு பாரத தேசம் எமக்கு துணை நிற்க வேண்டும். எமது தந்தை நாடு என்ற அடிப்படையில் நமக்கு துணை நிற்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் விடுகின்றேன்.

இன்றைய (நேற்றைய) விஜயதசமி நாளில் அப்துல் கலாமினுடைய நினைவு தினத்தில் பாரத தேசத்திற்கு ஒரு கோரிக்கையினை முன்வைக்க விரும்புகின்றேன். எமது நீண்டகால உரிமை கோரிக்கையினை பாரத தேசம் செவிசாய்க்க வேண்டும். நாம் தென்னிலங்கையில் இருக்கின்ற சிங்கள மக்களுக்கும் எதிரானவர்களல்ல. நாங்கள் மற்றைய இனத்தை அழிப்பதற்காக எமது உரிமையினை கோரவில்லை. நாங்கள் எம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக எம்மை வளர்த்துக் கொள்ள எமக்கு உரிமை வேண்டும் என கடந்த 60 வருடங்களாக போராடி வருகின்றோம். அந்த வகையில் பாரத தேசம் எமது கோரிக்கையினை நியாயமாக புரிந்து எமது கோரிக்கைகளை அடைவதற்குத் தன்னுடைய முயற்சி, அழுத்தங்களையும் அதனுடைய ஒத்துழைப்புகளையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். பாரத தேசம் தரும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

ஏற்கனவே 13ஆவது திருத்தச் சட்டத்தினை பெற்றுத்தந்தது இந்த பாரத தேசமே. அந்த நன்றிக் கடன் எமக்குள்ளது. இருந்தபொழுதும் அது எங்களது அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான முழுமையான தீர்வாகாது. அந்த வகையில் எங்களது நீண்டகால அரசியல் அபிலாசைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு பாரத தேசம் துணை நிற்க வேண்டும் என்றார். (ஞா-33)

# உள்நாட்டு பால்மாக்களின் விலையும் அதிகரித்தன

(கொழும்பு)

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால்மா வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன. அதன்படி, ஹைலண்ட் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக மில்கோ தலைவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 400 கிராம் பால்மாவின் விலை 90 ரூபாவினால் அதிகரித்து, 470 ரூபாவாக விற்பனை செய்யப்படும்.

ஒரு கிலோகிராம் பால்மா விலை 225 ரூபாவினால் அதிகரித்து 1,170 ரூபாவாக விற்கப்படும்.

இதேவேளை, பெல்வத்த நிறுவனமும் பால்மாவின் விலையை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 400 கிராம் பால்மா விலை தற்போது 460 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மா பொதியின் விலையை 250 ரூபாயினால் அதிகரிக்க கடந்த 9ஆம் திகதி பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

# டிப்பருடன் சாரதி கைது

(அராலி)

மண் ஏற்றிவந்த டிப்பர் ஒன்றுடன் அதன் சாரதி மிருசுவில் பகுதியில் வைத்து நேற்று மாலை கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மணல் அனுமதிப்பத்திரத்தில் திகதியை மாற்றி மோசடி செய்து மணலினை ஏற்றிச் செல்லும்போதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஞா-104)


**பௌதிகவியல் Physics**

2022, 2023 உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் (Physics)

- சகல அலகுகள்
- கடந்த கால வினாக்கள்

தனியாகவும்(personal), குழுவாகவும் கற்பிக்கப்படும்.

(8224) - 076 157 0107

**வேலையாட்கள் தேவை**

எமது புடைவை நிறுவனத்திற்கு புடைவை அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை. (C-2827)

சிவகணேசன் டெக்ஸ்ரெயில்ஸ்
இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

Scooty PEP
விற்பனைக்கு உண்டு. (8258)

074 102 7031

**அமெரிக்க லொத்தர் விசா**

2023ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
விரையுங்கள் பதிவுகள் ஆரம்பாகிவிட்டன 0768226244
55,000 இலவச விசாக்கள்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்.
எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் நூற்றுக்கணக்கானோர் குடும்பத்துடன் அமெரிக்காவில் வசிக்கின்றனர். (C-2791)
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
எம்மூடாக விசா வென்றவர்களின் விபரங்களை எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

V2 Travels இல் பதியுங்கள்! விசாவை வெல்லுங்கள்!


**காணி விற்பனை**

யாழ். கோப்பாய் - உரும்பிராய் பிரதான வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(உரும்பிராய் கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்)
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பார்வையிடலாம்.
11/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். (8261)
077 468 3354 (குரு)
077 505 8561, 077 288 0152

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள TVS முச்சக்கரவண்டி ஒன்று விற்பனைக்கு உண்டு. (C-2826)
தொடர்புகளுக்கு
077 035 7198


# மரண அறிவித்தல்



பிறப்பு 13 – 06 – 1960

இறப்பு 13 – 10 – 2021

## சண்முகம் கனகரத்தினம்

கண்டியைப் பிறப்பிடமாகவும் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் கனகரத்தினம் கடந்த 13.10.2021 (புதன்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் பிறேமாவதியின் அன்புக் கணவரும் விமலன், விமலினி, வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபரனின் அன்பு மாமனாரும் யர்ஸ்மிகா, யர்னிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (17.10.2021) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (8256)

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 608 3064 தகவல்:- குடும்பத்தினர்


**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-2789)
0768226240 DHL

**Win repair**

உங்கள் குளிர்சாதனப் பெட்டி பழுதடைந்து விட்டதா? உடனே எம்மை அழையுங்கள் குறித்த நேரத்தில் உத்தரவாதத்துடன் செய்து தருகின்றோம்.
தொடர்பு (8259)
077 964 8942

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-2814)
எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

**IELTS** DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)
Academic or General

IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 18/10/2021 Mon to Fri 8 am ZOOM Online (C-2822)

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deutsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி 0777 24 07 07 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| வடமராட்சி 021 226 2470 0777577333 | சாவகச்சேரி 021 227 0775 0777227074 | சுன்னாகம் 021 224 1970 0776032300 | சண்டிலிப்பாய் 021 225 6665 0761354503 | கிளிநொச்சி 021 228 5655 0776398096 |

**கனடாவில்**

உடனடி வேலைவாய்ப்பு
- Breakfast Attendant
- Office Admin
- Front Desk Agent
- Night Auditor
- Room Attendant
- Pool Attendant
- Housekeeping Supervisor
- Maintenance Worker
- Front Desk/Food Service Attendant
- Guest Service Manager

(C-2790)
தகுதிகள்:- A/L PASS / DIPLOMA/DEGREE
ஆங்கில அறிவு
Hotel Management சம்மந்தமான அனுபவம் /கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.